# இலங்கைக்கு செல்ல வேண்டாம்; பிரி. பிரஜைகளுக்கு தடை!

(லண்டன்)

இலங்கைக்கு உல்லாசப் பயணம் செல்ல வேண்டாமென தனது பிரஜைகளுக்கு பிரிட்டிஷ் அரசு தடை விதித்துள்ளது.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை குண்டு வைத்து தகர்ப்பதற்கு திட்டமிட்டிருந்த எல்லாளன் படை மீண்டும் தனது திட்டத்தில்

[5ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 02 இதழ் 132
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 16 - 6 - 1995

## புலிகளின் ஒரு பிரிவே எல்லாளன் படை!

(கொழும்பு)

'எல்லாளன் படை' என்ற அமைப்பு தனி ஒரு கட்சி அல்ல. அது விடுதலைப் புலிகளின் ஒரு பிரிவே என கொழும்பிலுள்ள தமிழ்குழுக்கள் தெரிவித்துள்ளன.

அவை மேலும் தெரிவிக்கையில்: வடக்கு- கிழக்கிற்கு வெளியே நடைபெறும் தாக்குதல்களுக்கான பொறுப்பை 'எல்லாளன் படையே' ஏற்கின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பு இதற்கு முன்னர் 'செம்படை அமைப்பை'யும் ஏற்படுத்தியிருந்ததாகவும் தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டதாகவும் அச்செய்திகள் தெரிவித்துள்ளன.

க-சி

# ★ வெளிநாட்டு போர்த் தளபாடங்களுடன் வட-கிழக்கை தாக்குவதற்கு அரச படைகள் தயார் நிலையில்!

## இரகசிய நிலையில் தாக்குதல் திட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மிகப்பெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள படையினர் திட்டமிட்டு வருகின்றனர். எனினும் இத்தாக்குதல் எப்போது ஆரம்பமாகும் என்பது இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் யாப்பில் திருத்தம் வருமா?

(கொழும்பு)

அரசியல் யாப்பில் திருத்தத்தை செய்வதா இல்லையா என்பது குறித்து இன்னும் சில வாரங்களில் இறுதி முடிவு எடுக்கப்படுமென நீதி, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

## இந்துமத விரோத நடவடிக்கைகளை கண்டித்து யாழ். நகரில் பேரணி

(யாழ்ப்பாணம்)

அரசின் இந்துமத விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையால் ஏற்பாடுசெய்யப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்ட கண்டனப் பேரணி நேற்று யாழ். நகரில் நடைபெற்றது.

நேற்று காலை சரியாக 10 மணிக்கு (5ம் பக்கம் பார்க்க)

## 'சமுர்த்தி' திட்டம் வடக்கு கிழக்கில் இடைநிறுத்தம்

[கொழும்பு]

சந்திரிகா அரசின் வறுமை ஒழிப்புத் திட்டமான 'சமுர்த்தி' திட்டத்தை வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்துவது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் இத்திட்டம் ஜூலை

(5ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி செல்லும் மண்ணெண்ணை அரைவாசியாக குறைக்கப்பட்டது

(கொழும்பு)

வடபகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மண்ணெண்ணை விநியோகம் அரைவாசியாக குறைக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்தியவானொலி தெரிவித்தது.

கொழும்பிலிருந்துஅனுப்பப்படும் இந்த மண்ணெண்ணையின் அளவு கடந்த காலங்களை விட தற்போது அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## 'அத்த' பத்திரிகை நிறுத்தப்பட்டது

(கொழும்பு)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியால் வெளியிடப்படும் 'அத்த' சிங்களப் பத்திரிகை நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கான தீர்மானத்தை கம்யூனிஸ்ட் கட்சி நேற்று நண்பகல் எடுத்ததென்றும் அன்றே பத்திரிகை நிறுத்தப்பட்ட

[5ம் பக்கம் பார்க்க]

## பரீட்சை நிலையம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

17ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள எழுதுனர் மற்றும் அதனோடு இணைந்த

[5-ம் பக்கம் பார்க்க]

## 'சுப்பசொனிக்' தாக்குதல்

(கொழும்பு)

ஓமந்தைப் பகுதியில் கடந்த 13ம் திகதி 'சுப்பசொனிக்' தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக நேற்று கொழும்பில் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேபோன்று கடந்த 12ம் திகதி பூநகரி முகாமின் தென்புறப்பிரதேசத்திலும் சுப்பசொனிக் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இ-சி




இந்து சமயப் பேரவை யாழ் நகரில் நேற்று நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட மதத்தலைவர்களையும், ஊர்வலத்தின் ஒரு பகுதியையும் படத்தில் காணலாம். [படங்கள்: தேவா]

# புலிகளுடன் பேச்சு நடத்தி இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு அரசு முன்வர வேண்டும்

(யாழ்ப்பாணம்)

அழிவுக்கு காரணமான போரை உடன் நிறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத ஆரம்பித்து இனப்பிரச்னைக்கு கௌரவமான தீர்வொன்றை அரசாங்கம் காண வேண்டும் இவ்வாறு இந்து சமயப் பேரவை நேற்று யாழ். நகரில் நடத்திய அரசின் இந்துமத விரோத நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவித்து நடத்திய கண்டன ஊர்வலத்தின் இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் பௌத்த மதத்துக்கு முதலிடம் அளித்து ஏனைய மதங்களைப் புறக்கணித்து வந்துள்ளன. எனினும் சமீப

## இந்துசமயப்பேரவை ஜனாதிபதிக்கு மகஜர்

காலமாக குறிப்பாக 1983ம் ஆண்டு தமிழருக்கு எதிரான இனப்போர் ஆரம்பித்த பின்னர் அரசாங்கத்தாலும் ஆயுதப்படையினராலும் இந்து மத விரோத நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்பதை மிகவும் கவலையுடன் தங்கள் கவனத்துக்கு கொண்டுவருவதுடன் இது சம்பந்தமான எங்கள் கண்டனத்தையும் தெரிவிக்க விரும்புகின்றோம். 2500 ஆண்டுகளாக இந்நாட்டில் பௌத்தர்களும் இந்துக்களும் சமயம் சம்பந்தமாக எவ்வித முரண்பாடுகளும் இன்றி வாழ்ந்து வந்துள்ளனர் என்பதையும் தங்கள் அரசாங்கத்தின் சமீப கால நடவடிக்கைகள் இந்நிலைக்கு குந்தகம் விளைவிக்கலாம் எனவும் அஞ்சுகின்றோம்.

இந்நாட்டில் கடந்த 12 வருடங்களாக இடம்பெற்று வரும் போரினால் 30,000க்கும் மேற்பட்ட தமிழ் இந்துக்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். தமிழ இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் வட பகுதி மீது பொருளாதார போக்குவரத்துத் தடைகள் போடப்பட்டு மக்களின் வாழ்க்கை சின்னாபின்னமாக்கப்பட்டது- இந்துக்களின் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் வழிபாட்டுக்குத் தேவையான பூசைத் திரவியங்களுக்குக் கூடத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

போரைச் சாட்டாக வைத்து இந்துக்கோயில்களில் மஹோற்சவங்கள் நடக்கும்போது வேண்டுமென்றே விமானத்தாக்குதல்களும், எறிகணைத்தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களுண்டு 1992 மே மாதம் 18ம் திகதி சரித்திரப் பிரசித்திபெற்ற வற்றாப்பளை அம்மன் கோயில் உற்சவம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலால் 15 பக்தர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அதே மாதம் 31ம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள மற்றொரு பிரசித்தி பெற்ற ஆலயமான தெல்லிப்பழை துர்க்கை ஆலயத்தில் மதிய பூசை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான விமானத்தாக்குதலால் 5 பக்தர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர் சமீபத்தில் 1995 மே 18ம் திகதி தொண்டமானாறு செல்வச் சந்நிதிமுருகன் ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலால் கோயில் கோபுரம்மடங்களும் சேதமாகின இதனால் நித்தியபூசைகளும் வழிபாடுகளும்தடைபட்டுள்ளன. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு நட்டஈடுவழங்குவதற்கு முன்னைய அரசு ஒப்புக்கொண்ட போதும் இதுவரை எவ்வித நட்ட ஈடும் வழங்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் அரச மரங்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் புத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. இவை அநேகமாக இந்துக் கோயில்களின் அருகாமையில் அமைக்கப்படுகின்றன. இந்துக்களின் வரலாற்றுப் பெருமை மிக்க திருக்கோணேஸ்வரத்துக்கு இந்துக்கள் சுதந்திரமாகச் சென்று அமைதியாக வழிபடமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. அதே வேளையில் இவ்வாலயத்திற்குச் சமீபத்தில் பௌத்த விகாரையொன்று கட்டப்பட்டு வருவதாக அறிகின்றோம். இவ்வாறான அரசின் நடவடிக்கைகள் பௌத்த-இந்து நல்லுறவுகளைப் பாதிக்கும் என்பதை அரசாங்கத்துக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

திருகோணமலையில் இந்துக் கோயில்களுக்குச்சொந்தமான காணிகளைப் பறிமுதல் செய்து, அக்காணிகளில் குடியேற்றங்களை நிறுவ முயற்சிகள் எடுக்கப்பட்டதாக அறிகின்றோம் இது மிகவும் பாரதூரமான விடயமாகும். நாம் இதனை வன்மையாக ஆட்சேபிக்கின்றோம்.

இத்தகைய அரசின் இந்து மத விரோத நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் ஜூன் மாதம் 15ம் திகதி ஆகிய இன்று ஒன்றுகூடிப் பிரார்த்தனை நடத்திப் பேரணியாகச் சென்று, இந்த மகஜரை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மூலம் தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம் நாம் பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்துகின்றோம்.

அரசாங்கமும், ஆயுதப் படைகளும் இந்துமத விரோத நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும், இந்துக்கோயில்கள் மீதான விமானத் தாக்குதல்களையும், எறிகணைத் தாக்குதல்களையும் நிறுத்தவேண்டும் சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களான திருக்கேதீஸ்வரம், உகந்தை முருகன் கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆகிய புனித ஸ்தலங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை உடன் நீக்கி, இக்கோயில்களை வழிபாட்டுக்குத் திறந்து விடவேண்டும்.

கீரிமலைப் புனித தீர்த்தத்தை இந்துக்களின் பாவனைக்குத் திறந்து விடவேண்டும், சேதப்படுத்தப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட ஆலயங்களை அரச செலவில் உடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது தகுந்த நட்டஈடு வழங்க வேண்டும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள இந்துக் கோயில்களில் பூசைகள் நடைபெற ஏற்ற ஒழுங்குகள் செய்யவேண்டும். வடபகுதி மீதான, பொருளாதார, போக்குவரத்துத் தடைகளையும், பூசை திரவியங்கள் மீதான தடைகளையும் உடன் நீக்கவேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட இந்துக் குருமார்களுக்கு விசேட நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் இந்துக் கோயில்களுக்குச் சொந்தமான காணிகளை அரசாங்கம் பறிமுதல் செய்யக் கூடாது. 162 170 ரி


## வரி விளம்பரம்

### குரக்கன் தேவை

குரக்கன் மொத்தமாகவும், சில்லறையாகவும் வாங்கப்படும். விபரங்களுக்கு:- அண்ணா தொழிலகம், இணுவில். (ஏ-4999)

### தவறிவிட்டது

திருமணப் படங்கள் அடங்கிய அல்பம் ஒன்று கிளிநொச்சிக்கும் -ஆலங்கேணிக்குமிடையில் 13-06-1995ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ம. வேலுப்பிள்ளை, ''கணேஸ் வாசா'', தொட்டிலடி, சங்கானை. (சி - 1521)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

பாதுகாப்பு சேவகர் (தாழ்தரம்) பதவிக்கான

### போட்டிப் பரீட்சை - 1995

1995-06-17ஆம் திகதி நடைபெறவிருந்த மேற்படி பதவிக்கான போட்டிப் பரீட்சை பல விண்ணப்பதாரிகளின் வேண்டுகோளிற்கிணங்க 1995 06-24ஆம் திகதிபி. ப.2-00 மணிக்குபற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்

(எ 5010)


### ஒட்சிசன் சிலின்டர்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணம் போதனைவைத்தியசாலைக்கு 36 ஒட்சிசன் சிலின்டர்கள் ''ஹபரண''கப்பலில் வந்துசேர்ந்துள்ளன.

ஒட்சிசன் சிலின்டர்கள்வந்து சேர்ந்திருப்பதால் ஒட்சிசன சிலின்டர்களுக்கு ஏற்படும் தட்டுப்பாடு நீங்கியுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. -170

## இராசி பலன்

16-06-1995

வெள்ளிக்கிழமை

[தமிழுக்கு ஆனி-02]

சதுர்த்தி பின்னிரவு 1.12 வரை, உத்தராடம் சித்த யோகம் மு. ப. 9 14 வரை இராகுகாலம் காலை 10 23 முதல் 11.53 வரை சுபவேளை காலை 5.53 முதல் 7 23 வரை.

மேஷம்: பெரியோர்மதிப்பு, இனசன சந்தோஸம், பண வரவு.

இடபம்: அதிகபிரயாசம், நிர்ப்பந்தம், சுடன்படல்.

மிதுனம்: எதிர்பாராத துன்பம், தொழில் கஸ்டம் அலைச்சல்.

கடகம்: உன்னதநிலை, நண்பர் வரவு, தெய்வீக செலவு.

சிங்கம்: தர்பசிந்தனை, சயன சுகம், அதிகாரிகள் பாராட்டு.

கன்னி: பணக்குறைவு, அஜீரண ரோகம், மனக்கவலை.

துலாம்: இனசன விரோதம், சபலபுத்தி, வைத்திய செலவு.

விருச்சிகம்; பெண் அறிவுரை, சுபகாரியம், நற்கீர்த்தி

தனுசு: காரிய தாமதம், மனசங்கடம், குதர்க்கவாதம்.

மகரம்: தொழில் சிறப்பு, பிறர்க்கு உதவுதல். பயணம்

கும்பம்: கீழ்படிதல். மனைவி சங்கடம். சோம்பல்.

மீனம்: குடும்பசுகம், அகங்காரம், முயற்சி பலிதம்.

— ஜோஸ்யர்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

16-06-1995

வெள்ளி இரவு

08.02 கலைமஞ்சரி - நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம் - அறிமுகமாவது தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் ''மகாஜன தீபம்'' எனும் நூல். அறிமுகத்தையடுத்து சிறுகதை ந. கோகுலன் எழுதிய - ''தந்தையாய்'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை ஆர். ரி. சித்திராங்கன் எழுதிய - புலர்வாய் ஒரு பொழுது'' ஆகியன கலைமஞ்சரியை அலங்கரிக்கும்.

08.25 கணப்பொழுது சி. கண்ணம்மா எழுதிய கப்டன் அந்தோனி.

08 30 செய்திகள்

08.40 அரசியல அரங்கம் வே பாலகுமாரன் எழுதிய ''ஒப்பாரியும் ஒப்புதல் வாக்குமூலமும்''

08 50 ஏர்முனை - நிகழ்ச்சியில் ''ஆடிப்பயறு'' குறு நாடகம்.

17-06-1995

சனி காலை

07.02 மாவீரவணக்கம்

07.15 நீங்கள் கேட்டவை

07 30 செய்திகள்

07.35 பத்திரிகைச் செய்திகள்

07.40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

16-06- 1995

வெள்ளி மாலை

05.01 சிந்தனைச்சிதறதல்

05.02 எழுச்சி கீதம்

05.10 புதியவை

05.15 கனநேரக் காவியங்கள்

05.30 மண்ணின் குரல்

05.40 நேயர் கடிதங்கள்

05.45 வெற்றிச் சுவடுகள்

06 00 சிந்தனைக்கு சிலவிநாடிகள்

05.02 நாடகம், பொம்பிளை பார்க்கப்போறம் அங்கம் - 6

06.15 விளையாட்டுச் செய்திகள்

06.35 என்தெரிவு

என்பன இடம் பெறும்.

### சைவநெறி தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை நடாத்தும் இலங்கை சைவநெறித் தேர்வு 94 ம் ஆண்டுக்கு உரிய சான்றிதழ்களும் 95ம் ஆண்டுக்குரிய விண்ணப்பபடிவங்களும் சகல பாடசாலைகட்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

சான்றிதழ்களும் விண்ணப்பப் படிவமும் கிடைக்காத பாடசாலை அதிபர்களையும் மேற்படி தேர்வில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலை அதிபர்களையும் தேர்வுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள் ரி

### மா, சீனி விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவு சங்கம் இவ்வாரம் தொடக்கம் பங்கீட்டு அட்டைக்கு 5 கிலோ மாவையும் குடும்ப அங்கத்தவர் தொகையை பொறுத்து கிலோ 31 ரூபா விலையில் சீனியையும் சங்க கிளைகள்ஊடாக விநியோகம் செய்துவருவதாக சங்கத்தலைவர் தெரிவித்தார்.

இதே வேளை நீண்ட காலமாக தட்டுப்பாடாக இருந்து வந்த நல்லரக வெள்ளைப்பச்சை அரிசியும் கிலோ27 ரூபா விலையில் சங்க கிளைகளில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. -72


## இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குதல்

வலி. கிழக்கு, வலி. மேற்கு வலி. வடக்கு, வலி. தெற்கு, வலி. தெற்கு - மேற்கு ஆகிய பிரதேச சபை எல்லைக்குள் சில இறைச்சிக் கடைகளை 25-06-1995 முதல் இவ்வருடம் முடியும்வரை குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதனால் குறித்த பகுதிகளில் இறைச்சிக்கடைகளை நடாத்த விரும்புபவர்கள் தங்கள் குடும்பப் பதிவு அட்டைகளுடனும், ஏற்கனவே கடைகளை நடாத்திக் கொண்டிருப்பவர்களாயின் சம்பந்தப்பட்ட பகுதிகளிற்கு செலுத்திய குத்தகைப் பணம் தொடர்பான பற்றுச் சீட்டுக்களுடனும். எதிர்வரும் 20-06-1995 காலை 9-00 மணிக்கு தமிழீழ நிர்வாக சேவையின் உள்ளூராட்சிப் பகுதிக்கு சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நன்றி.

பொறுப்பாளர்,

தமிழீழ நிர்வாக சேவை

யாழ். மாவட்டம்.

(எ 5009)

## மணிவாக்கு

அறியாமை மிக்கவர்கள் தங்கள் பேச்சை நிறுத்தி, மௌனத்தைக் கடைப்பிடித்தால் உலகத்தில் கலகமே இல்லை

—சாக்கரடீஸ்

## நமது நோக்கு

### முஸ்லிம்களின் நிலை

சிறிலங்காவில் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், அவ்வரசாங்கங்களில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தாங்கள் சிங்கள ஆட்சியாளர்கள் அளவு முழு அந்தஸ்தும், அதிகாரங்கள் கொண்டவர்களாக எண்ணுவதும், அவ்விதம் காட்டிக்கொள்வதும் வழக்கம்.

இந்த வகையில்தான் எம். ஏச். எம். பௌசியும் நினைத்திருக்கலாம். அந்த எண்ணத்துடன் கொழும்பில் இருந்து கடல் ஓரமாக ஒரு நெடுஞ்சாலையைக் காலிவரை அமைப்பதற்கான கோரிக்கையை அமைச்சரவையின் முன் வைத்தார். நெடுஞ்சாலைகள் அமைச்சர் என்ற முறையில் துறைசார்ந்த அறிக்கையையும். பிரித்தானியக் கம்பனி ஒன்றிடமிருந்தும் பெற்றிருந்தார். காலி வீதியில் தற்போது நிலவும் நெருக்கடியைக் குறைப்பதற்கே, இந்தத் திட்டத்தை அமைச்சர் வகுத்தார். ஆனால் அமைச்சரவையில் உள்ள அநேக சிங்கள அமைச்சர்களும், வேறு பலரும் இத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால், அது நடைமுறைக்கு வராத நிலையில் உள்ளது இதனால் பௌசி அவர்கள் மனத்தாங்கல் கொண்டு பத்திரிகைகளுக்கும் அறிக்கை விடுத்துள்ளார். தான் இன்னமும் தன் திட்டத்தை வலியுறுத்த உள்ளதாகக் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை ஜே. ஆர். ஜயவர்த்தன அமைத்த போது, அதை முஸ்லிம்களில் மிக முக்கியமானவரும், ஐ. தே. க. வின் தலைவராகவும் இருந்த எம். சி. எம். கலீல் எதிர்த்தாராம். அவருடைய எதிர்ப்பை ஜே. ஆர். பொருட்படுத்தாது தான் நினைத்ததைச் செய்து முடித்தாராம். ஆனால் கலீல் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை விழுங்கிக் கொண்டு சும்மா இருந்து விட்டாராம். இதை யார் கூறுகிறார் தெரியுமா? முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய புள்ளியும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான ரூப் மக்கீன் தான் இதை அம்பலப்படுத்தி உள்ளார். அவர் தற்போதைய அரசு இஸ்ரேலுடன் உறவுகளை மீண்டும் ஏற்படுத்தினால், முஸ்லிம் காங்கிரஸ் அரசுடனான தங்கள் உறவை உடனேயே துண்டித்துவிடும் என்று சவடாலாகப் பேசியுள்ளார். திரு. மக்கீனுக்கு ஏற்கனவே இஸ்ரேலிய இராணுவ ஆலோசகர்கள் பலர் சிறிலங்காவிற்கு வந்திருப்பதும், அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் குடாநாட்டுக்கு எதிரான போர்த் தந்திரோபாயங்களும், திட்டங்களும் தயாரிக்கப்படுவதும் தெரியாதா? பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிப்பது போன்ற செயலாகத்தான் இது தெரிகிறது.

உண்மை என்னவென்றால் முஸ்லிம் அமைச்சர்களும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளால் உபயோகிக்கப்படுகின்றார்களேயொழிய வேறொன்றுமில்லை.

# வடக்கே பொருட்கள் எடுத்துவர வவுனியாவில் படையினர் கெடுபிடி

[வவுனியா]

வவுனியா ராணுவ சோதனை முகாமில் படையினர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பொருட்களை வடபகுதிக்கு கொண்டுசெல்ல அனுமதி வழங்கி வருகின்றார்கள். அத்தியாவசியப் பொருட்கள் உட்பட சகல பொருட்களிலும் 25 வீதத்தையே படையினர் வடபகுதிக்கு கொண்டுவர அனுமதிப்பதோடு பல கெடுபிடிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்தில் கூட யாழ்ப்பாணம் நோக்கிவரும் தமிழ்ப் பயணிகளின் பொருட்களைபடையினர் சோதனையிட்டு பல பொருட்களை கொண்டுசெல்ல தடை விதித்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ம-சி)

# இலங்கையில் நிலைமை மோசம் ஜப்பான் முதலீடுகள் திசைமாற்றம்

(கொழும்பு)

இலங்கையில் அரசியல்ஸ்திரமின்மையால் இங்கு முதலீடு செய்யாமல் ஏனைய ஆசிய நாடுகளை நாடி ஜப்பானிய முதலீட்டாளர்கள் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பானிய பாரிய நிறுவனம் ஒன்று, ஏன் ஜப்பானியர்கள் இலங்கையில் முதலிட தயக்கம் காட்டி ஏனைய ஆசிய நாடுகளை நாடிச் செல்கிறார்கள் என்பதை விளக்கி குறிப்பிடுகையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

வேறு பல காரணங்களைக் குறிப்பிட்டபோதும் இலங்கையின் அரசியல் ஸ்திரமின்மையே முதன்மை படுத்திக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையர்கள், மோதல்கள் வடக்கிலே தான் இடம் பெறுவதாக குறிப்பிட்ட போதும் இதனோடு சம்பந்தப்பட்ட தீவிரவாத சம்பவங்கள் கொழும்பிலும் அடிக்கடி இடம்பெறுகின்றன. இவை ஜப்பானியர்களை குறிவையாத சம்பவம் ஆனாலும் இதில் சம்பந்தப்பட ஜப்பானியர்கள் விரும்பவில்லை. அதிமுக்கியமானதும் பாரியதுமான தமிழர் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும் இது தீர்க்கப்படாவிடில் இலங்கைக்கு வரவுள்ள பெறுமதியான முதலீடுகள் நெதர்லாந்து, மலேசியா சிங்கப்பூர் இந்தோனேசியா ஆகிய ஆசிய நாடுகளை ஜப்பானியர்கள் நாடுவதனை தவிர்க்க முடியாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கே சி

# தற்கொலைத் தாக்குதலுக்கு புலிகள் விமானங்களை பயன்படுத்தக்கூடும்

## அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(லக்ஸசம்பேர்க்)

''விடுதலைப் புலிகள் பிரான்சிலிருந்து 6 இலகுரக விமானங்களைப் பெற்றுள்ளனர். இவ் விமானங்களை அவர்கள் தற்கொலைத் தாக்குதலுக்கு பயன்படுத்தவுள்ளனர்'' என இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் லக்ஸம்பேர்க்கில் நடைபெறும் ஐரோப்பிய மன்ற மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்;- விடுதலைப் புலிகள் தரையிலிருந்து ஆகாயத்துக்கு ஏவக்கூடிய ஏவகணைகளையும் இலகுரக விமானங்களையும் பெற்றிருப்பது இலங்கைக்கு மட்டுமல்லாது அயல்நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக அமைகிறது. இது உபகண்டம் முழுவதும் அதற்கு அப்பாலும் எச்சரிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பாவில் விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்று. இலங்கைச் சமூகத்தை சின்னாபின்னப்படுத்திவரும் பயங்கரவாதம் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படும்வரை ஐரோப்பாவிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகங்களின் நடவடிக்கைகளை கணகாணிப்பின்கீழ் கொண்டுவருவது அவசியமானது என்றார்.

ஐரோப்பிய மன்றத்தில் பெல்ஜியம், அயர்லாந்து, பின்லாந்து, பிரான்ஸ், போர்த்துக்கல், சுவீடன் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களையும், ஐரோப்பிய ஆணைக்குழுவின் உபதலைவர்களையும் லக்ஷ்மன் கதிர்காமர் தனித்தனியாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்

இலங்கையின் அண்மை நிலைகள் பற்றி கேள்வி எழுப்பிய பிரான்ஸ் வெளி விவகார அமைச்சர் மைக்கல் டனேருக்கு லக்ஷ்மன் கதிர்காமர் பதிலளிக்கையில் இராணுவ வழிகள் மூலம் வெற்றி காண முடியும் என புலிகள் நினைக்கிறார்கள். ஆனால் இராணுவ வழிகள் மூலம் ஒருபோதும் தீர்வுகாண முடியாது. எவ்வாறாயினும் விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சு வார்த்தையில் பங்குகொள்ளச் செய்வதற்கு அவர்களுக்கு தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

(ர-சி)

## அமைய தொழிலாளர் பலருக்கு நிரந்தர நியமனம் இல்லை

(நெல்லியடி)

யாழ் போதனா வைத்திய சாலையில் அமைய ஆண், பெண் தொழிலாளர்களாகத் தொழில் புரியும் பலர் இன்னமும் நிரந்தரமாக்கப்படவில்லை எனத் தெரிவிக்கபடுகின்றது.

சிலர் சுமார் எட்டுவருட காலமாக அமையத் தொழிலாளர்களாக இருந்து வருகின்றபோதிலும் அவர்கள் இன்னமும் நிரந்தரமாக்கப் படவில்லையாம்.

160-கி

## மலத்தியோன் விசிறல் மட்டுப்படுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் மலத்தியோன் விசிறும் நடவடிக்கைகளை மட்டுப் படுத்தியுள்ளனர்.

மாநகராட்சி மன்றப் பகுதியில் நுளம்புகளின் பெருக்கம் மலேரியாவின் தாக்கம் இருக்கும் இடங்களிற்கே மலத்தியோன் விசிறப்படும் என்று மாநகர சுகாதாரப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மலத்தியோனை மட்டுப்படுத்தி பாவிக்கும் முகமாகவே மலத்தியோனை விசிறும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தியிருப்பதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

(170 - சி)

## தெற்கில் வீதி விபத்தை தடுக்க சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

தெற்கில் அதிகரித்துவரும் வீதி விபத்தைத் தடுக்கும் பொருட்டு மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது.

குற்றமிழைக்கும் சாரதிகளுக்கு உயர் தண்டனை வழங்கக்கூடிய விதத்தில் இந்தச் சட்டத்திருத்தம் அமையவுள்ளது.

இதன்படி பாதசாரி ஒருவர் சாரதியின் கவலையீனத்தால் இறந்தால் அச் சாரதியின் வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும்.

இதுதவிர சாரதி ஒருவர் விபத்தில் சம்பந்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரது சாரதி அனுமதிப்பத்திரத்திரத்தில் தலா ஒருகரும்புள்ளி வீதம் இட்டு அவரது அனுமதிப்பத்திரத்தில் மொத்தம் 24 கரும்புள்ளிகள் காணப்பட்டால் அச்சாரதிக்கான ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (கி)

## உணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அட்டைக்கு உணவுப்பொருள்களை வழங்கி வருகின்றது.

அங்கத்தவர் எண்ணிக்கை அடிப்படையில் இப்பொருள்கள்வழங்கப்பட்டு வருகின்றன மா, சீனி, அரிசி, தீப்பெட்டி போன்ற பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

170-சி

## பலதும் பத்தும்

### பலமொழி நிபுணர்

சட்டத்திற்கு லத்தீன். ராஜதந்திரத்திற்கு பிரெஞ்சு, விஞ்ஞானத்திற்கு ஜேர்மன், வர்த்தகத்திற்கு ஆங்கிலம் "போல பக்திக்கு தமிழ்!'' என மொழிகளின் சிறப்புக்களை ஒப்பிட்டவர் யார் தெரியுமோ?

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்திற்கு வித்திட்ட தனிநாயகம் அடிகளார் தான்! கத்தோலிக்கப் பாதிரியார் ஆவதற்காக அவர் இத்தாலியில் தங்கியிருந்து பயிற்சி பெற்றார். அப்போது ... மத அறிவைப் பெற்றதோடு பல மொழிகளையும் ஆராயும் ஆவல் ஏற்பட்டது. அதனால் ... 12 க்கு மேற்பட்ட மொழிகளைக் கற்றுத் தேர்ந்தாராம்!

மதம், மொழி மாத்திரமல்ல கல்வியியலிலும் நிபுணத்துவம் பெற்றார் இலண்டனில் கல்வியியலிற் கலாநிதிப் பட்டம் பெற்று. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் விரிவுரையாளராகவும் கடமையாற்றினர் !

— மயூரன்

## வெள்ளி விருந்து

### பொருள் உணர்ந்து ஓதுக!

சிவபெருமானைத் தரிசித்துவிட்டுப் பிரமன் திரும்பிய போது முருகன் தடுத்து நிறுத்தி பிரணவத்தின் பொருள் விளக்கம் கேட்ட போது அவன் திகைத்து நின்றான்.

''மிகைத்த கண்களை விழித்தனன்
வென்கினன் விக்கித்
திகைத் திருந்தனன் கண்டிலன்
அப்பொருள் திறனே''!

என்கிறது கந்தப்பராணம்.

பிரமன் வேதத்தை அறிந்தானே - யன்றி உணர்ந்திருக்கவில்லை. இதனை அறிந்தவன் முருகன். பிரணவ மந்திரத்தையே தமது திருமுகங்களில் ஒன்றாகவுடைய முருகப் பெருமான் ''ஓம்'' என்ற பிரணவ மந்திரத்தின் பொருளைக் கேட்டபோது அவனது கண்கள் சுழன்றன; நாணமுற்று விக்கித்திகைத்தான். 'எல்லா மந்திரங்களுக்கும் வேதங்களுக்கும் மூலமாய் விளங்குவது பிரணவம் இதன் பொருளைத் தெரியாது வேதமோதுவதும் படைத்தல் தொழிலை ஆற்றுவதும் தப்பாகும்! என்பதைப் பிரமனுக்கு உணர்த்துவதற்கே இவ்வாறு உணர வைத்தார் குகமூர்த்தி.

செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

[''பத்துச் சொற்பொழிவுகள்'']

# பனை ஏறும் பொறிக்கு பத்துலட்சம் ரூபா சன்மானம்

பனை மரத்தில் ஏறுவதற்கு பொருத்தமான பொறியை உருவாக்குபவர்களுக்கு பத்து இலட்சம் ரூபா சன்மானம் வழங்குவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது. கண்டுபிடிப்பாளருக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம் வழங்குவதான அறிவிப்பு தமிழீழத்தில் இதுவே முதல் முயற்சி.

பனைமரத்தில் இருந்து உற்பத்திகளைப் பெற்றுவரும் நடவடிக்கை நெடுங்காலமாக எமது நாட்டில் நிலவி வருகின்றது. உற்பத்தி முயற்சிகளில் காலத்திற்கேற்ற வளர்ச்சி மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. ஆனால் சாற்றுற்பத்தி (கள், பதனீர்) முயற்சியானது அன்று தொட்டு இன்று வரை எதுவித மாற்றமுமின்றி உடல் வலுவை பாவித்து மரமேறியே மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

அனைத்துத் துறைசார்ந்த விடயங்களும் விஞ்ஞான அணுகு முறைகளினால் விருத்தியடைந்து வரும் இவ்வேளையில் பனஞ்சாற்று உற்பத்தித் தொழில் மட்டும் பாரம்பரிய முறைத்தொழிலாக இருந்து வருவது காலத்தோடு ஒன்றிப் போகாத தன்மையையேபிரதிபலிக்கின்றது.

பனைவளத் தொழில்களுள் சாற்றுற்பத்தித் தொழிலே அதிசிறந்ததும், வித்தியாசமானதும்ஆகும். உற்பத்திசெய்த சாற்றைப் பதனிடும் தொழில் பல்வேறு பரிமாண வளர்ச்சியைக் கண்டுள்ளது.

பனஞ்சாற்றில் இருந்து ஆரம்பத்தில் பனங்கட்டி, கல்லாக்காரம், ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டன, பின் மதுசாரம், (சாராயம்) பனஞ்சீனி, மதுவம் (ஈஸ்ட்) போன்ற பொருட்கள் உற்பத்திகள் ஆரம்பமாகின.

இவற்றுள் எமது தேசத்திற்கு மிகுந்த பயனளிக்கும் பொருளாக பனஞ்சீனி உள்ளது. தற்போது இறக்குமதியாகும் கருப்பஞ் சீனியே எமது இனிப்புத் தேவையைப் பூர்த்தி செய்கின்றது. இதனால் பெருமளவு பணம் அந்நிய நாடுகளுக்கு போகின்றதுடன், தங்கிவாழும் நிலையும் உள்ளது.

தமிழீழம் சீனித்தேவையில் தன்னிறைவடையத் தக்க மூலப்பொருளை இங்குள்ள பனை வளத்தின் ஒரு பகுதியை பயன்படுத்தி பெறமுடியும்.

தமிழீழத்தின் சனத்தொகை 25 லட்சமாக இருக்கக்கூடும் என மதிப்பிடப்பட்டிருந்த 1992ம் ஆண்டில் எயது தேசத்தின் வருடாந்த சீனித்தேவை 55500 மெற்றிச் தொனனுகை இருந்தது. இதனை உற்பத்தி செய்யவேண்டுமானல்6580000 பனைமரங்களும் 329000 பனந்தொழில் வல்லுநர்களும் தேவை என மதிப்பிடப்பட்டிருந்தது. தமிழீழத்தின் பனை மரத்தொகையில் இது 60 வீதமாகும்.

சனத்தொகை 30 இலட்சமாக இருக்கக்கூடுமென மதிப்பிடப்பட்டிருக்கும்(1994) இக்காலப்பகுதியில் எமது வருடாந்த சீனித் தேவை 67000 மெற்றிக் தொன்னுகை அதிகரித்துள்ள வேளையில் இதனை உற்பத்தி செய்ய தேமையான பனைகளின் எண்ணிக்கை 30 இலட்சமாகவும் தேவைப்படும் பனந்தொழில் வல்லுனர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளன. இது மொத்தப் பனைத்தொகையின் 28 வீதமாகும்.

உடல் வலுவைப் பாவித்து மரமேறி உற்பத்தி செய்யும் நடைமுறை இருக்கத்தக்கதாகவே இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. விரைவாகவும் சுலபமாகவும் மரம் ஏறுவதற்குப் பொருத்தமான ஒரு பொறி உருவாக்கப்பட்டுப பயன் படுத்துவதன் மூலம் இன்னும் சாதகமான பல பாரிய மாற்றங்களை சந்திக்கலாம்.

துரித உற்பத்திக்கு சாதகமான பொறியைப் பயன்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் வருவாயை அதிகரிக்கலாம். பதநீர் உற்பத்திச் செலவைக் குறைக்கலாம்.

பதநீர் உற்பத்திச் செலவு குறைவதால் பனஞ் சீனியின் உற்பத்திச் செலவு குறைவடையும். கருப்பஞ் சீனியின் விலைக்கு நிகராக பனஞ்சீனியின் விலை அமையும் போது உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் சந்தைப்படுத்தல் சுலபமாகிவிடும்.

பனஞ்சீனியின் மூலப்பொருளான பதனீர் மரத்திலிருந்து குறித்த நேரத்திற்குள் எடுக்கப்பட்டுப் பதப்படுத்தப்பட வேண்டும். பாரம்பரிய முறையில் மரமேறி உற்பத்தி செய்யும் போது குறைந்த அளவிலான உற்பத்திகளையே தனிநபரால் மேற்கொள்ளமுடியும்.

பொருத்தமான பொறியொன்றைப் பாவிப்பதன் மூலம் குறைந்த நேரத்திற்குள் கூடிய உற்பத்தியைப் பெற முடியும்.

குறைந்த மனித வளத்தைப் பயன்படுத்தி கூடிய பயன்களைப் பெறும் முயற்சியில் உலக நாடுகள் ஈடுபட்டுள்ளன. நாமும் அதனைத் தொடரவேண்டும்.

பனை ஏறும் பொறிஒன்றின் தேவை எமது பிரதேசத்தில் பல வருடங்களுக்கு முன்பே உணரப்பட்டுள்ளது யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது பனை ஏறும் பொறியொன்று காட்சிக்கு வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து சில முயற்சிகள் பொறி உருவாக்கல் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இவை எவையும் சாற்றுற்பத்தித் தொழில் முறைக்கு ஏற்ற வகையில் அமையவில்லை.

உடல் வலுவைப் பாவித்து மரமேறுவதைவிட சுலபமாகவும், விரைவாகவும், இலாபகரமாகவும் அமைகின்ற பொறிமுறைதான் தொழிற்படு மக்களாலும், தொழில்நுட்பவியலாளர்களாலும் பொருத்தமானதென ஏற்றுக்கொள்ளப்படும் இத்தகைய பொறியொன்றின் தேவை தான் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பொறி ஆக்கும் முயற்சிகள் தொலை நோக்குக் கொண்ட நிறுவனத்துறையுடன் ஆரம்பிக்கப்படாமையால் அவ்வப்போது தொடங்குவதும் முடிவதுமாக இருந்தனவே தவிர தொடர்ந்து ஆய்வுகள் செய்து அபிவிருத்தி காண்பதாக அமையவில்லை.

## இந்தியாவில் வெப்பத்தினால் 213 பேர் உயிரிழப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் கடுமையான வெப்பத்திற்கு தினமும் பலர் பலியாக வருகின்றனர் தற்போது வெடபத்தின் கொடுமையால் இறந்தவர்களின் எண்ணிக்கை 213 ஆக உயர்ந்துள்ளது.

உத்தர பிரதேச மாநிலத்தில் நேற்று முன்தினம் 14 ம்பர் வெப்பத்தினால் இறந்துள்ளது குறிப்பிடத்தககது

-ரி

## மாணவர் அறிவியற்கழக வகுப்புகளின் விபரம்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவிலில் இயங்கும் மாணவர் அறிவியற் கழகத்தின் ஏற்பாட்டில நடைபெறும் வகுப்பு விபரங்கள் வருமாறு:-

இன்று வெள்ளிக்கிழமை பி. ப 3மணி ஆண்டு 11 விஞ்ஞான செயன்முறை வகுப்பு மூளையின் மாதிரி அமைப்பினை பார்வையிடலும் அதற்கான விளக்கமும். பி. ப 3 30 மணி ஆண்டு 10 கணித செயன் முறைவகுப்பு 'தொடையின்' மிகுதி.

17 ம் திகதி சனிக்கிழமை மு. ப 9. 30 ஆண்டு 9 கணித செயன் முறை வகுப்பு 'சுட்டியின்' தொடர்ச்சி பி. ப 3 30 மணி ஆண்டு 9 விஞ்ஞான செயன்முறை வகுப்பு தனி ஊசலைப் பயன்படுத்தி சக்தி மாற்றத்தை அறிதல்.

## பயிர் நஷ்ட நிவாரணம் வழங்க கோரிக்கை

(நெல்லியடி)

பலாலிப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா ராணுவத்தின் ஷெல் வீச்சினால் விவசாயத் தொழிலையும், பயிர்களையும் கையிழந்து அகதிகளாகியுள்ளதால் பயிர் நஷ்ட நிவாரணம் வழங்குமாறு விவசாயிகள் கோரியுள்ளனர்

இக் கோரிக்கை அடங்கிய மகஜர் அச்சுவேலி, வளலாய், இடைக்காடு பத்தைமேனி போன்ற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளினால் வலிகிழக்கு பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(160)

## அரிக்கன் லாம்பு கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகம் அரிக்கன் லாம்புகளை கொள்முதல் செய்துள்ளது.

தற்போது வைத்தியசாலையில் மின்சாரம் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வருவதால் மின்சாரம் இல்லாத வேளையில் வார்ட்டுகளுக்கு அரிக்கன் லாம்புகளை வழங்கும் முகமாகவே இவ் அரிக்கன் லாம்புகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

170-ரி

## இலவச இசைப் பயிற்சி

(கொழும்புத்துறை)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தில் இலவச இசைப்பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டுவருகிறது.

இவ் இலவச வகுப்பில் சங்கீதம்' வயலின், மிருதங்கம், கிற்றார் போன்ற இசைப் பயிற்சி வகுப்புகள் இசை ஆசிரியை திருமதி. சு. தங்கமலரால் தற்போது நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

-154

## ஆத்திசூடி முற்றேதல் விழா

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைச் சர்வோதயத்தின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம் முற்றேதல் விழா நாளை 17 ம்திகதி சனி காலை 9 00 மணிக்கு மட்டுவில் தெற்கு அ. மி. த. க பாடசாலையில் அதிபர் சி. கே. துரைரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்பு விருந்தினராக தலைமை நிலைய அறங்காவலர் திரு. க. திருநாவுக்கரசுவும் பிரதம விருந்தினராக முன்னாள் கொத்தணி அதிபர் ஆ. செல்லையாவும் கலந்துகொள்வர்.

-ரி

## புனித. அந்தோனியார் உற்சவம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் புனிதஅந்தோனியார் ஆலயவருடாந்த உற்சவம் கடந்த 9-ம் திகதி வெள்ளிக்கிழமை யன்று ஆரம்பமாகியது

இம் மாதம் 18-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு கூட்டுத் திருப் பலி பூசையும் திருச் சொரூப பவனியும் நடைபெறவுள்ளன

72-கி

## கண்டெடுக்கப்பட்டது

அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் செல்வி சந்தையா சுகந்தி என்பவருடைய பாடசாலை அடையாள அட்டை வி. பிரான்சிஸ் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டது.

உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

0 0 0

யாழ் குருநகர் வங்கசாலை வீதி திருமதி ஜீவரசம்மா தனபாலன் [அடையாள அட்டை இல. 455970555 V] என்பவருடைய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## யாழ். ஊழியர்களுக்கு இலகு கடனில் துணிகள்

(யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட புடவை கைத்தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் யாழ். மாவட்டத்தை சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கும், கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்களுக்கும் கடனடிப்படையில் உடுதுணிகளையும், 'பெற்சீற்'' துணிகளையும் விநியோகிப்பதற்கு முன் வந்துள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களினல் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள், வேட்டிகள், சாரிகள், பெற்சீற்றுகள் போன்றவைகளை கடனடிப்படையில் பெறவிரும்பும் அரசாங்க ஊழியர்களும் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களும் இதற்கு கோண்டாவில் இருபாலை வீதியிலுள்ள சமாஜ பணிமனையில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் என்று சமாஜத்தின் தலைவர் மா புலேந்திரன் தெரிவித்தார்.

72 கி

## பாலர் பாடசாலை ஆசிரியர் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்

(வட்டுக்கோட்டை)

பாடசாலைகளுக்குச் செல்லும் வகையிலே குழந்தைகளை தயார்ப்படுத்தி உதவுகின்ற பாலர் பாடசாலை ஆசிரியர்களது சம்பளம் மிகக் குறைவாகக் காணப்படுகிறது. இவர்களது சம்பளத்தை உயர்த்த சகலரும் ஆவன செய்யவேண்டும்.

சித்தன்கேணி கலைநகர் மாதர் சங்க அறவழி மழலைகள் கல்விப்பூங்கா பாலர்பாடசாலை வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொணடு உரை நிகழ்த்திய வலிமேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழா நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் திரு. கா. சந்திரராசாவழங்கினார்.

மாதர் சங்கச் செயலாளர் செல்வி அருள்மொழி முருகநாதன் நன்றி கூறினார்.

136

## ரஷ்யாவில் ஆயுத பாணிகளால் 160 பேர் பணயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுததாரிகள் அங்குள்ள அலுவலகம் ஒன்றைக்கைப்பற்றி அங்கிருந்து 160 பேரை பணயக் கைதிகளாக்கியுள்ளனர்

இச்சம்பவத்தின்போது 41 பேர் கொல்லப்பட்டனர். பலரக ஆயுதங்களுடன் தாக்குதல் நடாத்திய இக்குழுவினர் ரஷ்யாவின் தென் பகுதி நகரமான குட்ஜான் நகரத்துக்குள் வந்து இவ் அலுவலகத்தைக் கைப்பற்றினர்.

ரஷ்யாசெச்னியாமீது தொடர்ந்து தாக்குதல் நடத்துமானல் பணயம் வைக்கப்பட்டுள்ள 160 பேரையும் கொன்றுவிடப்போவதாக அவ்ஆயுதக் குழுவினர் எச்சரித்துள்ளனர். இவர்கள் செச்னிய போராளிகளாக இருக்களாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ம-சி

யாழ்ப்பாணம் நல்லூர் இளநூலகம்.

# பேராசிரியர் துரைராசா கல்வி உலகுக்கு அளப்பரிய பணியாற்றினுர்

## இளங்குமரன் அஞ்சலிஉரை

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் தலைசிறந்த கல்விமானுக, உயர்ந்த அறிஞராக திகழ்ந்த பேராசிரியர் அமரர் துரைராசா கல்விஉலகுக்கு ஆற்றியபணி அளப்பரியது. இந்தமண்ணை எமது மக்களை இறுதிவரை நேசித்து வந்த அவர் இந்த பண்ணில் ஏற்பட்ட பயங்கர இடர்பாடுகளில் தாமும் பங்கேற்று எமது மண்ணின் விடிவுக்காக தன்ஞலான சகல பங்களிப்பையும் செலுத்திவந்தார்.

யாழ் பல்கலைக்கழககைலாசபதி கலைஅரங்கில் நடைபெற்ற பேராசிரியர் துரைராசாவின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தமிழீழ கலைவிக்கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; அந்நியப்படைகளிஞல் எமது தமிழீழப் பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த வேளையிலே பலவகையான அனர்த்தங்கள் நடந்து கொண்டிருந்தவேளையில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பொறுப்பை ஏற்று சிறப்பாக நடத்தி வந்தார். பல்கலைக்கழக நிர்வாகத்துடன் மட்டும் இவர் நின்றுவிடாது பொதுமககளுடன் இணைந்து அவர்களுக்கு நேர்ந்த இன்னல்கள் இடர்பாடுகளில் தாமும் பங்கு கொண்டு அவர்களுக்கு வேண்டிய தேவைகளை அவ்வப்போது மேற்கொண்டுவந்தார்.

ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தமக்கு வேண்டிய தேவைகள் பற்றி இவருடன் அணுகும்போது அன்பான வார்தைகளால் அவர்களை அரவணைத்து அவர்களுக்கு வேண்டியதை நிறைவு செய்து வைக்கும் பக்குவமான மனம்படைத்தவர் என்றுர்.

துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தனது தலைமை உரையில் அனர்த்தங்கள் நிறைந்த காலகட்டத்தில் பல்கலைக்கழக நிர்வாகத்தைஏற்று சிறப்பாகநடத்தி வந்த பேராசிரியர் அமரர் துரைராசா தொழிலாளர் கல்வி, வெளிவாரி கல்வி போன்ற கற்கை நெறிமுறைகளை அறிமுகம் செய்து வைத்தார். பொறியியல் பீடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்தார். இங்குள்ள ஆசிரியர்களை பலதரப்பட்ட ஆய்வுகளில் ஈடுபடுமாறு ஊக்குவித்தார் என்று கூறினுர்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ், பதிவாளர் திரு. பரமேஸ்வரன் உட்பட பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள் பலர் அஞ்சலி உரைநிகழ்த்திஞர்கள்.

162- ரி

---

வவுனியாவில்

## கோபுரம் விழுந்து ஒருவர் பலி; 8 பேர் காயம்

(வவுனியா)

வவுனியாவில் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்று வீழ்ந்ததில் ஒருவர் பலியானுர் 8 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவத்தில் காயமடைந்தோர் வவுனியா, அனுராதபுரம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நகர்ப்பகுதியில் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் அமைந்த கட்டிடமொன்றே இடிந்து வீழ்ந்தாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. -கி

---

## குப்பி விளக்கு தீப்பற்றி வயோதிப மாது மரணம்

(யாழ்ப்பாணம்)

குப்பிவிளக்கு தட்டுபட்டு தீப்பற்றி எரிந்ததால் வயோதிபப்பெண் ஒருவர் மரணமாணர்.

சுன்ஞகத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் தெல்லிப்பளையில் இருந்து இடம் பெயர்ந்து சுன்ஞகத்தில் வசிக்கும் அமலதாஸ் புஸ்பராணி (60 வயது) என்ற வயோதிபப் பெண்ணே மரணமானவராவார். -90-ரி

---

மக்கள்

## தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சி காணவேண்டும்

(யாழ்ப்பாணம்)

எமது நாட்டின் பொருளாதார வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். எமது பொருளாதாரத் திட்டங்களை வகுத்து நடைமுறைபடுத்துவதற்கு எம் மத்தியில் விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவுகள் வளர்த்தெடுகப்பட வேண்டும் எமது மக்கள் தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சி காணவேண்டும்.

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் கீழ் வாகனப் பொறியியல் அடிப்படைக் கற்கை நெறி தொகுதி இரண்டை அண்மையில் ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகு இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்,

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: வளர்முக நாடுகளை எடுத்துக்கொண்டால் இந்த நாடுகள் பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெற்றிருப்பதற்கு அவர்களின் தொழில்நுட்ப வளர்ச்சியே காரணமாகும். இந்த வகையில் எமது நாட்டில் தொழில்நுட்ப வளங்களை வளர்த்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டு, புறநிலைப் படிப்புக்கள் அலகின் கீழ் பலவகையான தொழிலநுட்பக் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தி வருகின்றது.

இக்கற்கைநெறியில் 75 மாணவர்கள் இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. 162

---

## ஊன்று கோல்களை மீள ஒப்படைக்கக்கோரிக்கை

(வடமராட்சி)

மந்திகை வைத்தியசாலையிலிருந்து பெறப்பட்ட ஊன்று கோல்களை மீண்டும் திருப்பி ஒப்படைக்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுள்ளது.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இயங்கும் புனர் வாழ்வுச் சிகிச்சைப் பிரிவினரின் 1425 கோடி ஊன்று கோல்கள் பாதிப்புற்றவர்களிடம் தற்போது இருப்பதால் மேலும் பாதிப்புற்றவர்க்குச் சிகிச்சை அளிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக மேற்படி சிகிச்சைப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிறுவர்பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் இப்பிரிவினர் போலியோ, பாரிசவாதம், முறிவு போன்றவற்றிற்கு சிகிச்சையளித்து வருகின்றனர்.

சர்வதேச சுகாதாரப் பிரிவும் ஊனமுற்றவர்களின் உதவிக்கென 1500 ஊன்று கோல்களை இப்பிரிவிற்கு அன்பளிப்புச் செய்திருந்தது.

மேற்படி ஊன்று கோல்கள் ஊனமுற்றவர்களுக்குத் தற்காலிகமாக வழங்கப்பட்டு வந்தது.

தற்காலிகமாக வழங்கப்பட்ட ஊன்றுகோல்களில் இன்னும் 1425 சோடி ஊன்று கோலகள் பாதிப்புற்றவர்களிடமிருந்து திரும்பவில்லை என்றும் இதஞல் பல புதியவர்க்கு சிகிச்சையளிக்க முடியாமல் உள்ளதாகவும் மேற்படி பிரிவு தெரிவித்துள்ளது.

51- கி

---

## இலங்கைக்கு

(-1ம் பக்கத் தொடர்ச்சி

குறியாக இருப்பதாககிடைத்த தகவலையடுத்தே பிரிட்டிஷ் அரசு தனது பிரஜைகளுக்கு இத்தடையை விதித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கையில் புகழ்பெற்ற புனித தலங்கள் மற்றும் தங்கக் கடற்கரை போன்றவற்றை கண்டுகளிப்பதற்காக பிரிட்டனிலிருந்து பெருமளவில் வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை தற்பொழுது வெகுவாக குறைவடைந்துள்ளதாக இலங்கை உல்லாசப்பயணிகள் நிறுவனங்கள் கவலை தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

க-சி

---

## வடபகுதி செல்லும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதி மீது அரசு மேற்கொண்டுவரும் எரிபொருள். பொருளாதாரத் தடையின் தீவிர அமுலாக்கத்தையே இது காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் பொதுமக்கள் மீது பெரும் நெருக்கடிகளைக் கொடுக்கும் அரசின் இந்தப் போக்கை அண்மைக்காலமாக பல தரப்பும் கண்டித்து வந்த போதும் இராணுவத்தினரின் ஆலோசனைக்கிணங்க அரசு இந்த கட்டுப்பாட்டை அமுலுக்கு கொண்டு வந்துள்ளது,

ரி-சி

---

## கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுமககள் தம்மிடம் உள்ள குடும்ப அட்டைகளை திருத்தங்கள் மேற்கொள்வதற்கான கால எல்லை எதிர் வரும் யூலை 31-ம் திகதிவரை நீடிக்கபபட்டுள்ளதாகபோக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் குடும்ப பதிவு அட்டை பகுதியினர் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றனர்.

முன்னர் இக்கால எல்லை யூன் மாதம் 15-ம் திகதி என அறிவிக்கப்பட்டதும் தெரிந்ததே. -சி

---

## இந்துமத விரோத

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

நல்லூர் கந்தசுவாமி கோவில முன்றலில் இருந்து பேரணி ஆரம்பமாகியது.

பேரணி ஆரம்பமாவதற்கு முன்னர் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன் மண்டபத்தில் பிரார்த்தனை வழிபாடுகள் என்பன நடைபெற்றது. இந்த பிரார்த்தனை நிகழ்ச்சியில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினுர்.

ஆர்ப்பாட்ட பேரணியின் முதல்வரிசையில் இந்து குருமார் ஒன்றியத்தை சேர்ந்தவர்களும் அவர்களின் நடுவே நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சென்றனர். அவர்களை தொடர்ந்து இந்துமத பீடாதிபதிகள் கிறிஸ்தவமத குருமார்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள்' பொது மக்கள் இந்து இளைஞர்மன்ற பிரதிநிதிகள் அரசாங்க திணைக்களத்தை சேர்ந்தவர்கள். பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் வரிசையாக சென்றனர். பேரணியில் சென்ற மாணவர்கள் சுலோக அட்டைகளையும் தாங்கியவாறு சென்றனர்.

ஆயிரக்கணக்காஞேர் இப்பேரணியில் பங்கு கொண்டு இந்து வழிபாட்டு ஸ்தலங்கள் மீது மேற்கொண்ட விரோத நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து உலக சமுதாயத்துக்கு எடுத்து காட்டிஞர்கள்.

ஆர்ப்பாட்ட கண்டனப் பேரணிக்கான வீதி ஒழுங்குகளை தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டனர்.

சாரணர்கள் மற்றும் இந்து இளைஞர் மன்ற தொண்டர்கள் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினர் ஊர்வலத்திற்கு உதவிஞர்கள்.

பேரணி நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி, கோவில் வீதியூடாக சர்வதேசசெஞ்சிலுவைசங்கத்தின்யாழ்அலுவலகத்தைசென்றடைந்தது அங்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் அலுவலக நிர்வாக அதிகாரியிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து கோவில் வீதி கண்டி வீதியூடாக யாழ் செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு ஜஞதிபதிக்கான மகஜர் கையளிக்கும் வைபவம் இடம்பெற்றது.

இவ் வைபவத்தில் செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டி உரையாற்றிஞர். தொடர்ந்து ஜஞதிபதிக்கான மகஜரை இந்து சமயப் பேரவை செயலாளர் திரு. சக்திகிரீவன் வாசித்தார். பின்னர் இம் மகஜரை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் யாழ் மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளித்தார்.

இம் மகஜர் உரிய இடத்திற்கு சென்றடைவதற்கான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும் என்று மகஜரை பெற்றுக்கொண்ட மேலதிக அரச அதிபர் தெரிவித்தார் 170- 162- 90-71-ரி

---

## வெளிநாட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து இராணுவ அதிகாரி ஒருவர் பி. பி ஸி-க்கு தெரிவிக்கையில்: இனப்பிரச்னைக்கு அமைதித்தீர்வு காண்பது குறித்து அரசு பேச்சுக்களை நடாத்துவதற்கு முன் விடுதலைப் புலிகளை ஒடுக்க வேண்டும்.

படையினர் கேட்கும் இராணுவ தளபாடங்களையும் ஆயதங்களையும் அரசு வெளிநாடுகளிலிருந்து தருவித்து தந்துதவுகிறது. இந்நிலையில் புலிகளுக்கு எதிராக மிகப்பெரும் தாக்குதல் வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படும் என்றுர்.

இத்தாக்குதல்கள் எப்போது ஆரபிக்கப்படுமென்பதையும் இதில் எவ்வளவு துருப்புக்கள் ஈடுபடுத்தப்படுவர் என்பதையும் கூற அந்த அதிகாரி மறுத்துவிட்டதாகவும். பி. பி ஸி தெரிவித்தது. க சி

---

## அத்த பத்திரிகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி

தென்றும் பத்திரிகையின் ஆசிரியர் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராக செய்தி வெளியிட்டமைக்காகவே இப்பத்திரிகை நிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ம-சி

---

## பரீட்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சைக்கு சுன்ஞகம் இராமநாதன் கல்லூரியும் ஒரு பரீட்சை நிலையமாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. தற்போது இப் பரீட்சை நிலயம் உடுவில் மகளிர் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

எனவே இராமநாதன் கல்லூரி மண்டபங்களில் மேற்படி பரீட்சைக்கு தோற்ற உள்ள மாணவர்கள் உடுவில் மகளிர் பாடசாலை பரீட்சை மண்டத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றுர்கள். சி

---

## அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் யாப்பில் திருத்தம் செய்வதை பின்போடுமாறு பௌத்த பிக்குமாரும், பொது அமைப்புகளும் அரசைக் கேட்டிருப்பதாகவும் இதஞல் இது குறித்து விரைவில் ஒரு முடிவை எடுக்கவேண்டியிருப்பதாகவும் அமைச்சர் கூறிஞர்.

எனினும் அரசியல் யாப்பு திருத்தம் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வரும் ஆலோசனைகளை பரிசீலிக்கும் பணி தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார்.

-கி-சி

---

## சமுர்த்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் முதல் நடைமுறைக்கு வருகின்றது. இதன் உத்தியோக பூர்வ ஆரம்பவிழா இன்று கொழும்பில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் ஜஞதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெறவுள்ளது,

நாட்டில் சுமார் 17 லட்சம் பேர் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவர். கட்டாயச் சேமிப்புடஞன 'சமுர்த்தி' திட்டம் பணக் கொடுப்பனவையும் பண்டக் கொடுப்பனவையும் பெறுநருக்கு வழங்கும்.

சமுர்த்தி திட்டத்தை கண்காணிக்கவென கிராமசேவையாளர் பிரிவு தோறும் வழங்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் நியமனமும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

முன்னைய அரசும் தனது வறுமை ஒழிப்புத் திட்டமான 'ஜனசவிய'வை வடக்கு கிழக்கில் இடைநிறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. கி-சி

# பாரிய தாக்குதலுக்கு முன்னர் தீர்வுத்திட்டம் வெளியிடப்பட வேண்டும்

## தமிழ்க்குழுக்கள் கோருகின்றன

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாரிய தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் இனப்பிரச்சினை தொடர்பான அரசின் தீர்வுத் திட்டத்தை வெளியிடவேண்டும் என்று கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

ஈ. பி டி. பி, புளொட் ஆகிய தமிழ்க்குழுக்களே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளன

இனப்பிரச்சினை குறித்த தீர்வுத் திட்டத்தை வெளியிடுவதில் ஏற்படும் தாமதத்தினால் அரசு மீது மக்கள் நம்பிக்கை இழக்கவேண்டிவரும் என்று ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் தமிழ் எம். பிக்களும் அதில் பங்கு கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ரி-சி

---

# பெனஸிரின் சகோதரர் கடத்தப்பட்டு கொலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் பெனசிர் பூட்டோவின் மூத்த சகோதரரான முஸ்தார் பூட்டோ இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய் இரவு இடம்பெற்றுள்ளது. இவரது கொலைக்கு காரணம் யார் என்பது பற்றியும் இவர் கொல்லப்பட்டதற்கான காரணமும் தெரியவில்லை.

இவர் அண்மைக் காலமாக பிரதமர் பெனசிருடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்ததும் தெரிந்ததே. ம-சி

---

# புலிகளின் தற்கொலைப் படை தமிழகத்தினுள் ஊடுருவி விட்டது

— எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் பிரிவினர் ஊடுருவியிருப்பதாக தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கைகளுக்கு தமிழக அரசு ஊக்கமளித்து வருகிறது. தமிழகத்தில் புலிகள் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் நோக்குடனே தமது தற்கொலைப் பிரிவினரை அனுப்பிவைத்துள்ளனர்,

ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி உட்பட பல முக்கியஸ்தர்கள் புலிகளின் கொலைப்பட்டியலில் இருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார். ரி-சி

---

# வர்த்தகப் புள்ளிகளை தேடும் பொலிஸார்

(கொழும்பு

பெரும் வர்த்தகப் புள்ளிகளையும், வெளிநாடுகளுக்கு செல்ல வந்திருப்போரையும் மையமாக வைத்து கொழும்பில் சிலபொலிஸ்கோஸ்டிகள் தேடுதலை மேற்கொள்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன,

இத்தேடுதல்களில் சில உயர் பொலிஸ் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டுள்ளனர் எனவும் இப்புள்ளிகளிடமிருந்து கப்பமாகப் பெறப்படும் பணத்தில் ஒரு பகுதி அவர்களுக்கும் பங்கிடப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது

பொலிசாரின் பேரம் பேசுதலுக்கு இணங்காதவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படுகின்றனர். கி-சி

---

# தரை, கடற் புலிகளால் படையினர் அச்சம்

[கொழும்பு]

விடுதலைப்புலிகள் தரைப் பகுதியிலும், கடற்பகுதியிலும் தமது பலத்தைப் பெருக்கியுள்ளதால் இலங்கை கடற்படையினர் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டியுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள் கடற்புலிகள் என்ற பெயரிலும், கரும்புலிகள் என்ற பெயரிலும் தமது அமைப்பை பலப்படுத்தியுள்ளார்கள். இதனால் அவர்களின் திடீர் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதெனவும் கூறப்படுகிறது. க-சி

---

புலிகள் ஊடுருவலாம்

# கேரளத்தில் 'ஆழ்கடல் மீன்பிடிக்கு இந்திய அரசு 'தடைவிதிப்பு

(திருவனந்தபுரம்)

தென்னிந்திய மாநிலமான கேரளத்தில் ஆழ்கடல் மீன்பிடித்தலை மத்திய அரசு தடை செய்துள்ளது, நேற்று முதல் இத்தடை அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கேரளத்தின் முக்கிய துறைமுகங்களிலொன்றான கொச்சி துறைமுகத்தை மீன்பிடி ட்ரோலர்களை பயன்படுத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த உத்தரவு நேற்றிலிருந்து ஒன்றரைமாதகாலத்திற்கு அமுலிலிருக்குமெனவும். பின்னர் இது குறித்து பரிசீலிக்கப்பட்டு தடையைத் தொடர்வதா என்பது குறித்துத் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கேரளம் தமிழகத்தின் வடக்கு எல்லைப்புறமாக அமைந்திருக்கிறது விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கையை தமிழகத்திலிருந்து ஏனைய அயல் மாவட்டங்களுக்கு மாற்றியிருப்பதாக இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் சில வாரங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தன.

கேரள கடல் பகுதியை விடுதலைப் புலிகள் தமது போக்குவரத்துக்கு பயன்படுத்தலாம் என்ற சந்தேகமே இந்த ஆழ்கடல் மீன்பிடித் தடைக்குக் காரணமாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது. -கி-சி

---

# லொறி மோதியதால் மாணவன் தலைசிதறிப் பலி

(நெல்லியடி)

வீதியில் சைக்கிளில் சென்ற மாணவன் மீது லொறி மோதியதில், அச்சிறுவன் தலைசிதறி ஸ்தலத்திலே பலியானார். லொறிச் சாரதி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

இப்பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4-45 மணியளவில் பருத்தித்துறை ஓராம் கட்டைச் சந்தியில் நிகழ்ந்தது.

கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியில் 10ம் ஆண்டில் படிக்கும் வறணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த சிதம்பரநாதன் ரமணீதரன் (வயது 15) என்னும் மாணவனே விபத்தில் பலியானவராவார்,

இது சம்பந்தமாக மந்திகை மருத்துவமனையில் நடைபெற்ற மரணவிசாரணையின் போது உடுப்பிட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வி. நடராசா விபத்து மரணமெனத் தீர்ப்பளித்து, சடலத்தை உறவினரிடம் ஒப்படைத்தார். 160-சி

---

இடம்பெயர்ந்தோருக்கான

# உலர் உணவுப் பொருள் விநியோகம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவுப்பொருள்களை மறுஅறிவித்தல் வரை விநியோகிக்க வேண்டாமென யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் யாழ் மாவட்டத்திலுள்ள சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளனர்.

தற்போது 26பி, 27ஏ சட்ட நிவாரணப் பொருட்களே இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்க இருப்பதால் இவ்நிவாரணம் விநியோகிப்பதை மறு அறிவித்தல்வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறும் புனர்வாழ்வுப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைக் கேட்டுள்ளது. 170-சி

---

# தொலைபேசி இயங்குகிறது

(மானிப்பாய்)

கடந்த சில நாட்களாக செயல்படாமலிருந்த கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையேயான யாழ் செயலக நேரடி தொலைபேசி தொடர்பு நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது. 71-சி

---

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை யங்ரேயல் விளையாட்டுக்கழகம் உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடாத்தும் 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம் வருமாறு:

ரேயல் 'பி' எதிர் பொற்பதி பாஷையூர் சென். அன்ரனீஸ் எதிர் அளவெட்டி 'யுத்' மோதுகின்றன. -சி

0 0 0

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு உதைபந்தாட்டச் சங்கத்தினால் விளையாட்டுக் கழகங்களிடையே நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழக மைதானத்தில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்ட விபரங்கள் விபரம் வருமாறு:

வளர்மதி எதிர் யுத்கார்மல் சென். மேரிஸ் எதிர் பாடும்மீன் சென். ஜெரிஸ் எதிர் அறிவொளியும் மோதுகின்றன. வி-சி

---

எழுதுவினைஞர் பரீட்சை

# தற்காலிக அனுமதி அட்டை இன்று வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

17-ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைக்குமான பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் இதுவரை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதோர், பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்தினை வலயம்-1 கல்வித் திணைக்களத்தில் இன்று 16 ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் சமர்ப்பித்தால் தற்காலிக அனுமதி அட்டை வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவத்தில் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் குறிக்கப்பட்டு, இதனை வழங்கிய அஞ்சல் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். பதிவுத் தபால் பற்றுச் சீட்டும் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற வெளி மாவட்டங்களில் பரீட்சை நிலையம் ஒதுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தங்களுக்குக் கிடைத்த அனுமதி அட்டைகளை சமர்ப்பித்தால் பரீட்சை நிலையம் ஒதுக்கிக் கொடுக்கப்படும் எனவும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். -சி

---

யாழ். பல்கலைக்கழக

# பரமேஸ்வரா ஆலயக் கொள்ளையர் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

1993-ம் ஆண்டு பிற்பகுதியில் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரா ஆலயம் உடைக்கப்பட்டு நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தில் ஈடுபட்ட இருவர் தமிழீழ காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இக்கொள்ளை தொடர்பாக நீண்டகாலம் எதுவித தகவலும் கிடைக்காத நிலையில் தமிழீழ காவல்துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத்தகவலின் பிரகாரம் இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களால் விற்கப்பட்ட பவுண் நகைகளும் வெள்ளி ஆபரணங்களும் உருக்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி இருவரும் தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் இருவருக்கும் தலா 2000 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. மீட்கப்பட்ட பொருட்கள் கோயில் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. சி

---

மறைக்க வேண்டிய இரகசியமென்றால்
உங்கள் மனதோடு கூடப்
பேசாதீர்கள்:
மறைக்க வேண்டிய வேளைவரை
அதனை
மறந்துபோய் விடுங்கள் !!

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, (63ம் இலக்கத்திலுள்ள) அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.